**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – சிறப்புப் பள்ளிகள் – செவித்திறன் குறைபாடுடையோருக்கான 9 அரசு சிறப்பு பள்ளிகளில் தலா ஒரு பள்ளிக்கு ஒரு வகுப்பறையை நவீனமயமாக்கப்பட்ட திறன் வகுப்பறையாக (Smart Class) 2018–2019ஆம் நிதியாண்டில் மேம்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 34**

**நாள்: 07.09.2018**
**விளம்பி – ஆவணி, 22**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**
**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 4978/சி.ப.–2/2018, நாள் 20.06.2018.

----------

**ஆணை:**

2018–2019ஆம் ஆண்டுக்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்கள் 06.06.2018 அன்று ஏனையவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை செய்துள்ளார்கள்:–

> ‘‘சிறப்புக் கல்வி மேம்பாட்டிற்காக, மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் தமிழக அரசு மேற்கொள்ளும் சிறப்பு நடவடிக்கையில் ஒன்றாக, திறன் வகுப்பறை (Smart Class) ஏற்படுத்தும் திட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது. தமிழக அரசின் மூலம் நடத்தப்படும் 22 அரசு சிறப்புப் பள்ளிகளில் 10 பள்ளிகள் செவித்திறன் குறையுடையோருக்கான பள்ளிகளாகும். இப்பள்ளிகளில் புதுக்கோட்டை நீங்கலாக, 9 சிறப்புப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு ஒரு வகுப்பறை வீதம் திறன் வகுப்பறை (Smart class) அமைக்கப்படும். இவ்வகுப்புகளை, நவீன வசதிகளுடன் செவித்திறன் குறையுடைய 500 மாணவர்கள் பயன்பெறும் வகையில் கணினி, தளவாட சாதனங்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஒரு பள்ளிக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 9 பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.45.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்’’.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் செவித்திறன் குறையுடையோருக்காக செயல்படும் 10 அரசு சிறப்புப் பள்ளிகளில், புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் பள்ளி நீங்கலாக, ஏனைய 9 அரசு சிறப்புப் பள்ளிகளில், ஒவ்வொரு பள்ளியிலும், ஒரு வகுப்பறையை நவீனமயமாக்கப்பட்ட திறன் வகுப்பறையாக மேம்படுத்துவதற்கு மொத்தம் ரூ.45,00,000/– (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

[த.பி.பா.]

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, செவித்திறன் குறையுடையோருக்காக செயல்படும் 10 அரசு சிறப்புப் பள்ளிகளில், ஏற்கனவே நவீன மயமாக்கப்பட்ட திறன் வகுப்பறை அமைக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் பள்ளி நீங்கலாக, கீழ்க்கண்ட 9 அரசு சிறப்புப் பள்ளிகளில், ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு வகுப்பறையை கணினி, தளவாட சாதனங்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நவீனமயமாக்கப்பட்ட திறன் வகுப்பறையாக (Smart Class) மேம்படுத்துவதற்கு, ஒரு சிறப்புப் பள்ளிக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 9 சிறப்பு பள்ளிகளுக்கு ஆக மொத்தம் ரூ.45,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது:–

| வ. எண். | பள்ளியின் பெயர் மற்றும் மாவட்டம். |
|---|---|
| 1. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப்பள்ளி, தருமபுரி. |
| 2. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர். |
| 3. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம். |
| 4. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப்பள்ளி, ஊட்டி. |
| 5. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப்பள்ளி, சேலம். |
| 6. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப்பள்ளி, ஈரோடு. |
| 7. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப்பள்ளி, விருதுநகர். |
| 8. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான நடுநிலைப்பள்ளி, தாம்பரம். |
| 9. | அரசு செவித்திறன் குறையுடையோருக்கான நடுநிலைப்பள்ளி, கடலூர். |

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| கணக்குத் தலைப்பு | தேவைப்படும் தொகை (தொகை ரூபாயில்) |
|---|---|
| "2235 சமூக பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள்–DJ- நவீனமயமாக்கப்பட்ட திறன் வகுப்பறை அமைக்கும் திட்டம்" | |
| (i) 05 அலுவலகச் செலவுகள்<br>(அ) 01 தொலைபேசி கட்டணங்கள் [DPC-2235-02-101-DJ-0515] | 45,000/– |
| (ஆ) 05 அறைகலன் [DPC-2235-02-101-DJ-0551] | 13,50,000/– |
| (ii) 19 இயந்திரமும் சாதனமும்<br>01 வாங்குதல் [DPC-2235-02-101-DJ-1916] | 16,92,000/– |
| (iii) 76 கணினியும் துணைப் பாகங்களும்<br>(அ) 01 வாங்குதல் [DPC-2235-02-101-DJ-7616] | 11,88,000/– |
| (ஆ) 03 எழுது பொருள் [DPC-2235-02-101-DJ-7634] | 2,25,000/– |
| **மொத்தம்** | **45,00,000/–** |

**5.** மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை ஒரு ‘‘புதுபணி’’ குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முப்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (சந/வ.செ.பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

**6.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா எண் 43501/நிதி (ச.ந.)/2018, நாள் 06.09.2018–ல் பெறப்பட்ட ஒப்புதல் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1209 (ஆயிரத்து இருநூற்று ஒன்பது) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
சம்பந்தப்பட்ட செவித் திறன் குறையுடையோருக்கான அரசு
சிறப்புப் பள்ளிகள். (புதுக்கோட்டை மாவட்டம் தவிர)
[மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக]
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்,
சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்